செ.வெ.எண் :254/2009/செமதொஅ நாள்: 15.08.2009

**<u>கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் கிராம மக்கள் சேர்ந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் வேண்டுகோள்.</u>**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 648 கிராம ஊராட்சிகளிலும் சுதந்திர தின விழாவினை முன்னிட்டு கிராமசபை கூட்டம் நடைபெற்றது. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் திம்மசமுத்திரம் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சிறப்பு கிராமசபை கூட்டம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.என்.சுபீதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். இக்கிராம சபைக் கூட்டத்தில் பார்வையாளராக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப. கலந்து கொண்டார். , காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி சக்தி பெ.கமலாம்பாள் கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், முழு சுகாதார திட்டம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்ற திட்டப் பணிகள் குறித்த பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதியன்று அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட வேண்டும். இவ்விளையாட்டு போட்டிகளை அந்தந்த ஊராட்சிகளில் கட்டாயமாக நடத்திட வேண்டும்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, எளிய மக்கள் இலவச மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து ரூ.30 ஆயிரம் வரையிலான மருத்துவ சிகிச்சைகளை பெற்று பயன் பெறலாம். இந்த திட்டத்தில் 10 தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறலாம். இந்த திட்டத்தினை பற்றி பொதுமக்கள் நன்கு தெரிந்து பயன் பெற வேண்டும். அதே போல உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் எனும் புதிய காப்பீட்டுத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.07.2009 அன்று சென்னையில் தொடங்கி வைத்துள்ளார். இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை போன்ற மிக முக்கிய அறுவை சிகிச்சைகளுக்கு ரூ.1 இலட்சம் வரை மருத்துவ காப்பீட்டுத் தொகை இத்திட்டத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டம் உழவர் பாதுகாப்பு அட்டை உள்ளவர்கள் மற்றும் கிராமபுறங்களில் உழவர் பாதுகாப்பு அட்டை இல்லாதவர்களும் இந்த அட்டையினை பெற்று பயன் பெறலாம். இந்த புதிய காப்பீட்டுத் திட்டம் குறித்து கிராம மக்கள் தெரிந்து கொண்டு அதனை மற்றவர்களுக்கு எடுத்து கூறி பயன் பெற செய்ய வேண்டும். இந்த காப்பீட்டு திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்னும் இரண்டு மாதத்தில் தொடங்கப்பட உள்ளது.

கிராம புறங்களில் பெண்கள் மற்றும் இளம்சிறார் காணாமல் போனால் உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும். மேலும் இதுகுறித்து சம்மந்தப்பட்ட வட்டாட்சியரிடமும் தகவல் தெரிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்த பகுதியில் அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் சாம்பலால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக புகார் தெரிவித்தனர். இது சம்மந்தமாக தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரிய பொறியாளர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டார். இலவச வீட்டுமனை பட்டாக்கள் மற்றும் பல்வேறு கோரிக்கை மனுக்களை கிராம மக்கள் அளித்தனர். இது குறித்து உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.”

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி சக்தி பெ.கமலாம்பாள், காஞ்சிபுரம் கோட்ட ஆட்சியர் திரு.எஸ் பன்னீர் செல்வம், வட்டாட்சியர் திரு. ஜோதிபிரகாசம், காஞ்சிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ரகுராமன், திரு.குமாரசாமி அரசு அலுவலர்கள் மற்றும் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திருமதி.எஸ்.சாந்தி, உறுப்பினர்கள் தேவராஜ், அரிகிருஷ்ணன், ரவிக்குமார், சரிதா, சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோவிலில் சுதந்திர தின விழாவினை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப., காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சக்தி பெ. கமலாம்பாள் மற்றும் அறங்காலர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுடன் அமர்ந்து சமபந்தி விருந்து உண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். விஜயகுமார், வி.ரகு (எ) வெங்கடேசன், டி.கே.மணி, சுரேஷ், ஜீவானந்தம், திருமதி. வசந்தி சுகுமாறன், உதவி ஆணையர் திரு.செல்வராஜ், செயல் அலுவலர் திரு.வீ.சுந்தரமூர்த்தி, மற்றும் நகர மன்ற உறுப்பினர் திரு.அரங்கநாதன், திரு.பன்னீர்செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியிடுபவர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**